# இனிய உன் நாமம் ஓதிடல் தினமே

இனிய உன் நாமம் ஓதிடல் தினமே
அனைவரும் மகிழ்வோமே
தாயினும் மேலாம் தாயுமே நீரே
தமியோர் திரவியமே
அன்பிதே அன்பிதே மாதா
தன்னலமே அற்ற மாதா - தாயினும்......

**1**
கலை மொழியால் உனைத்
துதித்திடல் நாளும்;
கவலையை நீக்குமம்மா -(2)
பலவகைப் பாகும் தெளிவுறு தேனும்
தெவிட்டா உணவாமே. - (2)

**2**
பஞ்சமும் நோயும் பசியும் தீர
பார்த்திபன் யேசுவையே
அஞ்சலி புரிவோம் அம்மா மரியே
அனவரதமும் துதிப்போம்